

2009
விடுதலை
FRIHET
ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு;
நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.
சங்கீதம் 50:15




OSLO - NORWAY
2008

















## உள்ளே...


1. நினைவில் 2
2. சபையின் தரிசனம் 3
3. உன் நம்பிக்கை... 4
3. தொடரும் சபையின் வரலாறு 6
4. பொங்கு தமிழுக்கு... 7
5. Hi Friends! 8
7. வெறுமையாகுதலின்... 11
8. படம் பார் பாடம் படி... 13
9. சகோதரிகளே... 14
10. ஆயத்தப்படு... 15
11. கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக 16
12. கவிதைத்துளிகள் 17
13. பழையன... 18
14. அன்பான தகப்பன்... 19



**நூல், அட்டை வடிவமைப்பு, தட்டச்சு:**
கிரிதரா முன்னநாதன்
கிளாஸ்டோன் இருதயநாயகம்



Tamil Baptist Menighet
Vålerengata 2
0657 Oslo

Tel - 64925691 - Mob - 95881223
anto-b@online.no
www.tamilbaptist.net


# சபையின் தரிசனம்

தமிழ் கிறிஸ்தவ சகோதரர்கள் ஒன்றுகூடி கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள, கிறிஸ்துவை தலையாகவும் தன்னைச் சரீரமாகவும் கொண்ட ஆவிக்குரிய வல்லமையுள்ள ஐக்கிய சபையைக் கட்டுதல்.
(எபேசியர் 2:21,22 )

ஒஸ்லோவிலும் நோர்வே தேசமெங்கும் கிறிஸ்துவையும் அவரது அன்பையும் அறியாது வாழும் தமிழ் மக்களுக்கு, பாவம், வேதனை, துன்பம், என்பவற்றிலிருந்து விடுபட கர்த்தராம் கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் அறிவித்து, சத்தியத்தில் வழிநடத்துதல்.
(லூக்கா 24:47,48)

அநாதைக் கோலம் கொண்டுள்ள இலங்கை தேசத்தையும், கைவிடப்பட்ட மக்களிலும் பாரம் கொண்டு, இலங்கையிலும் அயல் தேசத்துக் கிராமங்களிலும், சமாதானத்தின் சுவிசேச வாசல் திறக்கப்படும்படியாக சமூகநல, சுவிசேசப் பணிகளையும், ஊழியங்களையும் தாங்குதலும் ஆரம்பித்தலும்.
(ஏசா 62:2)

# உன் நம்பிக்கை வீண் போகாது...

கர்த்தராம் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இவ்வருடத்தின் அரை ஆண்டைக் கடந்து வாழ்க்கை ஓட்டத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் உங்களை மறுபடியும் இவ் "விடுதலை சஞ்சிகை" மூலம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த அரையாண்டு எம்மைப் பொறுத்த வரையில் எம் சரித்திரத்தில் கறைபடிந்த ஓர் காவியமாகிவிட்டது போல நமக்கு காட்சியளித்தாலும், நம்மை நேசிக்கும் நம் தேவன் இவ்வாண்டின் முதல் நாளிலேயே "தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூறு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்." (யோவேல் 2:21) என்று நம் சபைக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைவுகூறுங்கால், ஓர் விடிவின் நம்பிக்கையை நமக்குக் கொடுக்கிறார் என்று நான் விசுவசிவிக்கிறேன்.

எம்மவர் கடந்துபோன கண்ணீரின் பாதை, யுத்தக்கரத்தின் கொடுமையான அழுத்தத்தினால் சிதறிப்போன நம் சமூகம்; சூழ்நிலைகள் எல்லாமே காத்திருந்த சுதந்திரமான விடுதலை வெளிச்சத்தை அணைத்து, எம் சந்ததியின் எதிர்காலமே இருண்டுவிட்ட விரக்கியின் உணர்வுகளையே வெளிக்கொண்டு வந்தது. விடுதலை, சுதந்திரம் எல்லாமே தூரக்கண்ட காணல் நீராயிற்றே என்று கலங்கி கண்ணீர் கன்னங்களில் தடவிச் செல்கிறதே.... என்று யாவரும் நம்பிக்கையற்று நடைபிணங்கலான காலமிதுவாயினும் இக் காலங்களில் "கலங்காதே, திகையாதே நான் உன் தேவன்" என்றவர் உன் விடுதலைக் கனவு இன்னும் சாகவில்லை அதை மறுமுனைக்கே நான் கொண்டுவந்தேன், என்று நமக்கு உணர்த்துகிறார். கனவுகள் சில காலம் மௌனமாகும்; ஆனால் மரிப்பதில்லை. அவற்றை ஒருவராலும் கொன்று விட முடியாது.

"பலத்தினாலும் அல்ல பாராக்கிரமத்தினாலும் அல்ல தேவனுடைய ஆவியினாலே எல்லாமாகும்" என்றவர் மனித பெலமல்ல தெய்வ தயவே விடுதலை என்று நம்மிடம் உணர்த்துகிறார்;



என்றே வியக்குறேன். ஓர் விடுதலையற்ற இந்த சூழ்நிலையில் இந்த விடுதலை மடல் நமக்கு என்ன கொடுக்கும் என்று கூட நீங்கள் கேட்க கூடும். "விடுதலை" என்பது அது திடீரென தோன்றி மறைந்து விடும் ஓர் மின்னலல்ல. அது மங்கியெரியும் சுடராய் தொடங்கி தனி நபர், குடும்பம், அயலவர், சமூகம், தேசம் என பற்றி எரியும் காட்டுத்தீயது.ஆனால் அத் தீ சிறு சுடராய் ஆரம்பிப்பது ஒரு தனிமனிதனுள்ளே என்பது அநேகர் அறியாத ஓர் மறைக்க முடியாத இரகசியமே.

இந் நம்பிக்கை இழந்த சூழலிலும் ஓர் நம்பிக்கையை ஊட்டும் தெய்வ வார்த்தையாகிய வேதாகமம் நமக்கொரு சரித்திரத்தை வெளிக்காட்டி நம்பிக்கையை வருவிக்கிறது.

அது என்ன சரித்திரம். அது தான் யூதர்கள் பஞ்சத்தினால் எகிப்திற்கு சென்று தங்கள் தெய்வத்தை மறந்தனர். அப்போது 400 வருடங்கள் அடிமைகளாகப்பட்டனர். ஆனாலும் மெய் தெய்வம்; தம் அவல நிலை யில் அழும் இஸ்ரவேலர் குரலைக் கேட்டார்... மனம் நொந்தார்! இரங்கினார்! அவர்களை அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து விடுவிக்க மோசே என்ற ஓர் தேவ மனுஷனை அழைத்து அவனூடாக இஸ்ரவேல் எனும் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்தார். ஆனாலும் அவர்கள் காலப்போக்கில் ஆசீர்வாத மயக்கத்தில் தங்களை விடுதலையாக்கி ஆசீர்வதித்த தெய்வத்தை மறந்து தங்கள் சுய நீதியினால்

தெய்வபாதுகாப்பை விட்டு விலகிப்போனார்கள். தங்கள் பெருமையினால் அநீதியை நடப்பித்தனர். அதனால் மீண்டும் மீண்டும் அடிமைகளாக அவதியுற்றனர். அதன் உச்சக்கட்டமாக இயேசுதெய்வத்தையும் சிலுவையில் அறைந்து அவர் இரத்தப்பழியை தங்கள் மேலலும் தங்கள் சந்ததிமேலும் வரட்டும் என்றனர். அதன் விளைவாக 6 இலட்சம் யூதர்கள் இரண்டாம் உலக மகா யுத்தத்திலே கொலைசெய்யப்பட்டனர். ஆனாலும் அவர்களை நேசித்து அவர்கள் முப்பிதாக்களுக்கு வாக்களித்த படி என் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன். (2 நாளாகமம் 7:14) என்றார்.

அந்த வாக்கை பிடித்துக் கொண்டு தேவ அன்பை தேடின போது தேவன் மறுபடியும் எதிரிகளின் மத்தியிலே ஓர் தேசத்தைக் கொடுத்தார். இன்று எதிரிகளின் எல்லைகள் மத்தியிலும் எவராலும் அசைக்கப்படாத செழிப்புள்ள பலமான தேசமாயிற்று. யூதர்கள் 6 இலட்சம் பேர் இனப் படுகொலை செய்யப்பட்டபோதும் இன்று பலமுல்ல ஜனமாகவே உள்ளது. 6 இலட்சம் பேரை இழந்த இனம் எப்படி பலமுள்ள தேசமானது. தங்களை ஜீவனுள்ள தேவனிடத்தில் தாழ்த்தினதினாலே தானே அப்படியானால் இனப்படுகொலையினாலும் அநீதியினாலும் ஒதுக்கப்படும் நெருக்கப்படும் எம்மினமும்....ஏன் ஓர் விடுதலையுள்ள கௌரவமான ஓர் விடிவைக் காண முடியாது. நிச்சயம் காண முடியும்!

விடுதலையின் கனவு மனித பெலம் என்ற நிலையிலிருந்து தெய்வ தயவு என்ற மறுமுனைக்கு தேவன் கொண்டு வந்திருக்கிறார். ஆகையால் எம்மவரே இழந்து போனது இழக்க முடியாததுதான். நொந்து போனதும் ஆறிமுடியாதது தான். ஆனாலும் எஞ்சியுள்ளது எம் சந்ததி என்ன செய்ய முடியும்??! கைவிடப்பட்டுப் போனோம்! என்று சோர்ந்து விடாமல் எம் கரத்தை எப்போதும் பற்றியிருக்கும் ஜீவனுள்ள தேவன் முன் எம் இயலாமையை ஒப்புவித்து நம் பொல்லாத வழிகளையும் விட்டு அவர் இரக்கத்தை தேடுவோமாகில்; அப்போது நமக்காக நம் ஆத்தும விடுதலைக்காக தம் ஜீவனையே தந்துவிட்ட இயேசு தெய்வம், நமக்காகவும் நம் தேசத்திற்காகவும் வைராக்கியம் கொண்டு நம் ஜனத்தை ஆற்றி தேற்றி அரவணைத்து ஷேமத்தைக் கொடுப்பார்.

**உன் நம்பிக்கை வீண் போகாது.!!**

**'தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூறுளு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.'**
(யோவேல் 2:21)

உங்களுடன் விடுடலையை
எதிர்பார்த்திருக்கும் ஊழியன்

அன்ரன் சின்னத்தம்பி



# தொடரும் எம் சபையின் வரலாற்றில் ஓர் கண்ணோட்டம்...

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் விடுதலையின் ஆண்டிலே உங்களை எமது ”விடுதலை” சஞ்சிகையினூடாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

”உன்னை வாலாக்காமல் தலையாக்குவேன்; கீழாக்காமல் மேலாக்குவேன் என்று சொன்னவர், சொல் தவறாதவராய் அவ்வார்த்தையை தமிழ் திருமுழுக்கு சபையிலே நிறைவேற்றி வழிநடத்துகிறார். எமது சபையானது தனது ஏழாம் ஆண்டு பூர்த்தியை 2008ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி நிறைவாகக் கொண்டாடியது. 2006 ம் ஆண்டிலே நடைபெற்ற ஐந்தாண்டு நிறைவு வைபவத்தைப்பார்க்கிலும் விஷேசம் என்னவென்றால் எமது சபைப் பிள்ளைகளும் விசுவாசிகள் மாத்திரமே பாடவும் இசையமைக்கவும் நடனங்கள் நாடகங்களில் நிகழ்ச்சிகளை நிகழ்த்தவும் தேவன் பயன்படுத்தியிருந்தார். அவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இங்கிலாந்து சீயோன் சபைப் போதகர் சீஷர் அவர்கள் அழைக்கப்பட்டு இருந்தார். நாம் நினைத்ததிற்கும் ஜெபித்ததிற்கும் அதிகமாகவே 200 இற்கும் மேற்ப்பட்ட ஒஸ்லோ வாழ் தமிழ் ஜனங்கள் ஒன்று கூட தேவன் இரக்கம் பாராட்டினார்.



அன்றய நாளில் தானே சபையில் ஆலோசனைத் தலைவராக பணியாற்றி வந்த சகோ:புதியவன் முருகானந்தன், சகோ: நேசன் கிறிஸ்தோபர் ஆகியோர் சபை மூப்பர்களாக அபிஷேகிக்கப்பட்டனர். இவ்வண்ணமாக அவ்விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் அந்நாள் பொழுது ஆசீர்வாதமாக அமைந்தது.

அத்துடன் 2008ம் ஆண்டு கிறிஸ்மஸ் விழா மிக சிறப்பாக அமைந்தது. வழமைபோல் எமது நல்லாயன் தமிழ் பாடசாலை மாணவர்கள், ஒய்வுநாள் பாடசாலை மாணவர்களும் இணைந்து தரமான நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். அவர்களுடைய திறமைகளை வெளிக்கொண்டு வர உதவிய அசிரியர்களுக்காக தேவனுக்கு நன்றி.

எமது சபையின் மிஷனரிப்பணிகள் நோர்வே, இலங்கை, இந்தியா என தேசங்களாக பரவிக் கொண்டு வருகிறது. இதற்காக எமது போதகரும் குடும்பமும் எடுத்துக் கொண்ட பிரயாசங்கள், அர்ப்பணிப்புக்களைப் பற்றி கூறுவது மிகையாகாது. எமது மேய்ப்பனுடைய ஊழியப் பயணங்களில் கர்த்தருடைய சமூகம் முன்செல்வதற்காக கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

வழமைபோல் திருமுழுக்கு சபையானது; இம்முறையும் நம் தேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர் மேல் பாரங்கொண்டு, ஓர் கண்ணீர் இரங்கள் ஆராதனையை நடத்தியதுமின்றி, அவசர நிவாரண தேவைகளுக்கான நிதி திரட்டல் முயற்சியை ஆசீர்வதித்த தேவன், சபையினால் 47500 குரோணர்களையும், நோர்வேஜிய திருமுழுக்கு சம்மேளணத்துடனூடாக 43750 குரோணர்களையும் சேர்க்க கிருபை செய்தார். இவ் முழுத் தொகையும் கொண்டு வவுனியாவிலுள்ள அகதிகளுக்கு எம் மேய்ப்பரின் மேற்பார்வையில் தேவ ஊழியக்காரர் மூலமாய் செய்ற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டிலே இன்னோர் மைல் கல்லாக, ஓர் இணைய வானொலியை ஆரம்பிக்க கர்த்தர் திராணியைத் தந்தார். நவீன ஊடகங்கள் மூலம் நற் செய்தியைப் பரப்ப மற்றும் சபைக்கான இணையத்தளங்களை அமைக்க கர்த்தர் கருணை காட்டியுள்ளார். இவ் இணையத்தளங்கள் மூலமாக ஒவ்வொரு ஓய்வுநாளின் தேவ வார்த்தைகளை ஒளிப் படங்களாக வெளிக் கொண்டுவர தேவன் கிருபை செய்தார். இந்த தொழிநுட்பங்களை செய்து முடிக்க சபையிலே தேவன் தந்த தேவ பிள்ளைகளுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம். www.tamilbaptist.net/com www.v1fm.com

2003 ம் ஆண்டில் நான்கு பேருடன் ஆரம்பமான எமது வாலிபர் ஐக்கியம் Generation “C” 2008 இல் இரண்டு வாலிபர் முகாம்களை நடத்தியதின் விளைவாக, தற்போது இருபது வாலிபர்களை கொண்ட குழுவாக வளர்ந்து உள்ளது. சபையின் முதுகெலும்பைப் போல் செயற்படுகிற எம் வாலிபப்பிள்ளைகள் ஜெபத்திலும், வேதத்திலும் தரித்திருந்து கர்த்தருக்காக வாழ முடிவெடுத்து உள்ளனர்.

பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்வது இல்லை. இந்நாள் வரைக்கும் தேவனுடைய சுத்தக்கிருபை ஒன்றே எம் சபையை தாங்கி வருகின்றது. இவ்வாண்டின் வாக்குத் தத்தத்தின்படி யோவேல் 2:22, கர்த்தர் பெரிய காரியங்களை சபையிலே செய்கிறார். கர்த்தருக்கே மகிமை!

**சகோதரி. கொன்சில்டா பிரசாத்**



# பொங்கு தமிழுக்கு இன்னல் விளைவித்தால் உலகில் எழுப்புதல் நடக்கும் என்று சங்கே முழங்கு !!

கனவுகள் சுமந்த கண்கள்
கண்ணீரைப் பெற்றெடுத்தது
இழப்பதற்கு ஏதுமில்லை
இருந்த உயிரும்
இப்போது இல்லை

கண்ணீர் உண்டு - அழ
கண்கள் இல்லை
மொழிகள் உண்டு - பேசுவதற்கு
வாய்கள் இல்லை
கனவுகள் உண்டு - நடந்து முடிக்க
கால்கள் இல்லை

பச்சைப் புழுவுக்கும்
பத்துப் புற்கள் உள்ளது
பறந்து விரிந்த பூமிப்பந்தில்
பத்துக் கோடி
புழுக்கள் வாழ்ந்தும் - ஒரு புல்
இல்லை என்பது விந்தை தான்

ஒரு காக்கை விழுந்தால்
ஐம்பது காக்காய் கூட்டமாய் கரையும்
- கூடிக் கரையும்
நாங்கள் வீழ்ந்தோம் - நாங்கள் வீழ்ந்தோம்
உலகத்துக் காக்கைகள் எல்லாம்
ஊமையாய் இருந்தது

உண்மைதான்!
மனித வலு உடைந்து போனது
உண்மைதான்!

மனித வலு உடையும் போது
தேவ வல்லமை
உனக்காய் போராடும் என நம்பு!
இல்லை என்பார்கள்
ஊண்டு என்று சொன்னவரை நம்பு!
உடைத்தது! அழித்தது!
பொய் என்பார்கள்
உருவாக்குபவர் உன் பக்கம்
உண்மையாய் உள்ளார் என நம்பு!

இறந்து போயிற்று என்பார்கள் - இல்லை
தூங்குகிறான் என்று சொன்னவரை நம்பு!
கொள்ளையடித்தவனின் சொந்தப்
பொருளையும் - உனக்கு
கொள்ளையாய் தருவாரென நம்பு!

கைம்பெண்ணின் கண்ணீரைக் கண்டவர்
கைவிடமாட்டார்!
எங்கள் கண்ணீரைக் காண்பார்!

எங்களுக்கு என உள்ளதை
எங்களுக்கு தருவார் என நம்பு!
உலகத்துக் காக்கைகள்
ஊமையாய் போயினும்
உள்ளூர் காக்கைகள்
உடன் பிறப்பின் காக்கைகள்
உண்மையாய் அழுகிறோம்!



**சகோதரன்: றிக்மன்**

# HI FRIENDS!

நான் இப்போ ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். இப்படியோர் சந்தோஷம் என்ட life இல் வரும் என்று நான் நினைக்கவேயில்லை. ஆன வந்தது. அதற்கு காரணம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே!
என்ன ஆச்சரியமா அல்லது இனியில்லை என்ற முட்டாள்தனம் என்று நினைக்கின்றீர்களா? சில வேளை முட்டாள்தனமாக இருந்தாலும் அது தான் உண்மை. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே அல்லாமல் என்னை மாதிரி போதைவஸ்துக்கு அடிமையானவனை விடுவிக்கவும், உங்களோடு சந்தோஷமாக மனந்திறந்து உண்மை பேச வைக்கவும் யாரால் முடியும்.

என்னுடைய life உம் 12 வயது வரையில் என் பெற்றோர் என் சகோதரங்களுடன் ஆனந்தமாகவே கழிந்து. ஆனால் எனது சூழல்; வீட்டில் இருக்கும் ஆனந்தத்தைவிட இன்னும் அதிக ஆனந்தத்தை தருவது போல், மிகவும் கவர்ச்சியாக காட்சியளித்தது. அது மகா பயங்கரம் என்று எனக்கு அப்போது தெரியவில்லை. அந்த சூழலில்; நான் பார்த்த எல்லா teen age பிள்ளைகளைப் போல நானும் இருக்க விரும்பினேன். அதனால் அவர்களைப் போல நடக்க, dress பண்ண, பேச ஆரம்பித்தேன். அப்போது என்னுடனும் நண்பர்கள் சேர்ந்தார்கள். என்னுடன் அதிகமான friends இருப்பது எனக்கு பெருமையாக இருந்தது. நானும் எல்லாப் பழக்கங்களும் பழகினேன். இந்த life உல்லாசமாக இருந்தது.

எனக்கும் 13 வயது ஆனது. அந்நாட்களில் என்னிலும் வயது கூடியவர்களுடன் நட்புக்கிடைத்தது. அந்த நட்பு எப்படி உருவானது என்று ஞாபகம் இல்லை, ஆனால் அந்த நட்பு என் வாழ்க்கையையே திசைமாற்ற போகிறது என்று நான் கனவில் கூட நினைத்திருக்கவில்லை. அவர்கள் நான் பார்த்திராத புதியமுறையில் புகைப்பிடித்தார்கள். எனக்கு அது என்ன என்று அறிய ஆவலாக இருந்தது. நான் கேட்டேன்!, அவர்கள் அது "கஞ்சா" என்று மிக சாதாரணமாக சொன்னார்கள். அவர்கள் சொன்ன விதம் எனக்கு "கஞ்சா" ஓர் பயங்கரமானது என்ற உணர்வே வரவில்லை. நானும் try பண்ணலாமா? என்று கேட்க, அவர்களும் ஓர் சின்னப்பையன் என்று என்னைத்தள்ளாமல், என் எதிர் கால நலனைக் குறித்து எந்தவித கரிசனையும் இல்லாமல், அன்புடன் புகைக்க கற்றுத்தந்தார்கள். நானும் புகைக்க ஆரம்பித்தேன்.ஆனால் அந்நாளிலிருந்து என் வாழ்வு புதைய ஆரம்பித்தது. பிணம் இருக்கும் இடத்தில் கழுகுகள் வந்து கூடும் (மத்தேயு 24:28) அதே போல எனக்கும் போதைப்



பழக்கம் உள்ள நண்பர்களே என்னைச் சூழத் தொடங்கினர். ஆரம்பத்திலிருந்த பயம் நீங்கிற்று. எனது இருதயம் கடினமானது. நண்பர்பர்களுடன் சேர்ந்து விளையாட்டாக எந்த காரணமும் இல்லாமல் ஆட்களுக்கு அடிப்போம். அது மாத்தரமல்ல பணத்தேவைக்காகவும் அடிப்போம்.அவர்கள் கெஞ்சினாலும் எங்களுக்கு இரக்கம் இல்லை, எங்களுக்குத் தேவை பணமே! அந்தப் பணத்தை அவர்கள் எவ்வளவு கஸ்டப்பட்டு சம்பாதித்து இருப்பார்கள்.பணத்தை இழந்தால் எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்ற எண்ணமே எங்களுக்கு வருவதில்லை. எங்கள் போதைத் தேவை நிறைவேற வேண்டும், அவ்வளவே! அது மாத்திரமல்ல, திறப்பில்லாமல் கார் திருட என்னிலும் வயது கூடிய நண்பர்கள் கற்றுத் தந்தார்கள். காரும் திருடினோம், கடையையும் கொள்ளையடித்தோம். நாங்கள் தான் உலகில் வெற்றி பெற்றவர்கள் போல் மார்தட்டிக் கொண்டோம். எங்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்கிற அளவிற்கு பெருமை பேரலையாக பொங்கி பொங்கி வந்தது.

இதற்குள் என் பெற்றோர் கர்த்தாராகிய இயேசுக்கிறிஸ்துவை தங்கள் வாழ்வின் சொந்த தெய்வமாக ஏற்று வாழத் தொடங்கியிருந்தனர். அவர்கள் என்னை Church இற்கு அழைப்பது எனக்கு எரிச்சலை உண்டு பண்ணியது. வேதம் தந்த போது, வேதத்தைக் கிழித்து எறிந்தேன். ஆனால் அவர்கள் ஜெபம் தான் கட்டுப்பாடற்று ஓடிய எனக்கு விரித்த வலை என்று நான் அப்போது நினைக்கவில்லை. அவர்கள் நான்

சாதாரண நிலையில் இல்லை என்று உணர்ந்து என்னுடன் நேரம் செலவழிக்க ஆரம்பித்தனர். ஆனால் நான் இதோ கொஞ்சம் வெளியில் போய் வருகிறேன் என்று நழுவி விடுவேன்.

எனது நடைமுறையில் பயப்பட்ட பெற்றோர் தேவனுடைய கரத்தில் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு காத்திருந்தனர். அப்போது எனது நடவடிக்கைகளில் சந்தேகப்பட்ட school நிர்வாகம் என் பெற்றோரை அழைத்து கலந்துரையாடியதன் விளைவாக டியசநெளநசெ இல் எனது எயமநெ பதிவானது.அவர்கள் என்னைப் பரிசோதித்ததின் மூலம் நான் கஞ்சா உபயோகிப்பது தெரிய வந்தது. எனது நிலைமையை என் பெற்றோரிடம் தெரிவித்தனர். என் தாயாருடைய கண்ணீரும் என் தகபனுடைய வேதனையான குரலும் எனக்கு எரிச்சலை உண்டுபண்ணியது. அதன் பின் வீட்டை விட்டு கொஞ்சம் விலகினேன். amfetamin,kokain பழக்கமும் ஏற்பட்டது. 16 வயதில் முதல் தடவையாக 2 கிழமை ஜெயிலில் இருந்தேன். அதற்கு காரணம் என் நண்பர்களே! அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையில் என்னை மாட்டிவிட்டு நழுவிவிட்டனர். அதனால் எனக்கு நண்பர்களின் சுயரூபம் விளங்கியது.ஆனால் ஜெயிலில் இருந்தது பெரிய விஷயமாக தெரியவில்லை. வெளியில் வந்தேன். மறுபடியும் அவர்களுடனே திரிந்தேன். அப்போது நான் அவர்களை கடுகளவும் நம்பவில்லை.

என்னை கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் barnevern, politi யும் தடுமாறிக்கொண்டிருந்தனர். இரண்டாவது முறை ஜெயில் செல்ல வேண்டிய சூழ்நிலையில், நான் பிள்ளைகள் சீர்திருத்தப்பள்ளிக்கு செல்வதை தேர்ந்து, Tønsberg சென்றேன். barnevern, politi யும் என்னை Oslo வைவிட்டு வெளியே அனுப்புவதில் குறியாக இருந்தார்கள். அதன் பின் நான்கு மாதங்களுக்கு எல்லாவற்றையும் விட்டேன். அப்போது முதல் தடவையாக என் பெற்றோரை என் மனம் தேட ஆரம்பித்தது. அதற்கிடையில் barnevern உடைய சட்டங்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு தண்ணி காட்ட ஆரம்பித்தேன். ஆனால் இப்படி தண்ணி காட்டி என்னால் அங்கிருந்து வெளியே வர முடியாது என்று விளங்கியது. ஆகவே வெளியில் வரும் வரை ஒழுங்காக இருக்க ஆரம்பித்தேன். நான் ஒழுங்காக இருந்தது அந்த இடத்தைவிட்டு வெளியில் வருவதற்கே! அவர்கள் என்னை நம்பினார்கள். தேவன் என் இருதயத்தை அறிவார்,அவர் என்னைக் கவனிக்கிறார் என்று நான் அறிந்து இருக்கலை. அவர் எனக்கு எல்லாவற்றையும் படிப்படியாக கற்றுத்தந்து விளக்கி, அதிலிருந்து என்னை விலக்கி வருகிறார் என்றும் நான் உணராமல், எனக்கு கிடைக்கும் சந்தோஷத்தில் வாழ்ந்தேன். அது அலுத்துப் போக வேறு சந்தோஷங்களைத் தேடினேன். ஒருமாதிரி அங்கிருந்து Hybel இற்குப் போனேன். வேலை செய்தேன்.எல்லாம் நன்றாகவே இருந்தது.

இந்நாட்களில் தமிழ் திருமுழுக்கு சபையினால் நடாத்தப்படும் summer camp இற்குச் சென்றேன் என்னவோ எல்லாம் நடந்தது. ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் போலவே இருக்க, எடுத்தேன்!. தேவன் விரித்த வலையில் சிக்கிவிட்டேன் என்று நினைக்கவில்லை. மீன்கள் வலையில் மாட்டியவுடன் கடலுக்குள்ளே இருப்பதனால், வலையில் மாட்டிவிட்டோம் என்று தெரியாமல் உள்ளே நீந்திக் கொண்டிருப்பது போல, நானும் ஞானஸ்நானம் எடுத்துவிட்டு பழைய வாழ்க்கையிலே சூழல ஆரம்பித்தேன்.

அப்போது தேவனுடைய கரம் என்னை இறுக்க ஆரம்பித்தது. அதனால் போதையில் கிடைத்த ஆனந்தம், வெறுப்பானது. எல்லாவழிகளும் தடைப்பட்டது. இதனால் தற்கொலை செய்து செத்துப்போகலாம் என்று நினைத்தேன். எனக்கு பெற்றோருடன் சேர்ந்து இருப்பதே அல்லாமல் வேறு வழி இருக்கவில்லை. இங்கு வந்தும் என்னில் மாற்றம் இல்லை. சூழ்நிலையால் வீட்டிற்கு வந்திருந்தாலும் கசப்பான அவ்வாழ்க்கையிலே இன்பம் தேடவே மனம் ஓடியது. மறுபடியும் அடுத்த வருட summer camp வந்தது. சந்தேஷமாக போகவில்லை, பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க போனேன். அச்சமயத்தில் இரண்டு வாரம் போதை எதுவும் பாவிக்காது இந்த நாட்களில் இருப்போம் என்று முடிவெடுத்து அங்கே சென்றேன்.

அப்போதும் அங்கே கொடுக்கப்பட்ட வார்த்தைகள் எதுவும் விளங்கவில்லை. லக்கி அங்கிளிடம் கதைத்தேன். இரண்டு படகில் பயணம் செய்யும் உணர்வு. நல்ல வழிக்கும் பழைய வாழ்க்கைக்கும் இடையில் நான் போராடினேன். என்னை தேவன் திருத்தி எடுப்பதிலே குறியாக இருந்ததினால் என் கண்ணீருக்கும் என் புலம்பலுக்கும் அவர் இரங்கவே இல்லை. வேறு வழியில்லை. திருந்தியாகனும் என்னால் முடியவில்லை என மனதில் அழுது ஓய்திருந்த வேளையில்,கடவுள் இருந்தால் எனக்கு ஏன் இந்த நிலை என்று முதல் தடவையாக யோசித்தேன். summer camp முடிந்தது.

வீட்டிற்கு வந்த போது என் அறையில் கொலுவியிருந்த வார்த்தை என்னுடன் பேசியது. ”இதோ,வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத்திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்”.(வெளி 3:20) எனது அறையில் அதிக வருடங்களாக இருந்த

வார்த்தையது. வாசித்து பார்த்து கடந்து சென்றேன். ஆனால் இன்று வாசிக்க வேண்டும் போல் இருக்கவில்லை, என் பார்வை அதிலே பட்டபோது எனக்கு ஏதோ புரிந்தது.

அதை உறுதி செய்து கொள்ள அப்பாவிடம் பேசினேன். அவர் அந்த வார்த்தையை உறுதிப் படுத்தினார். அந்நேரத்தில் தேவன் என்னோடு பேசுவதை உணர்ந்தேன். தேவனிடம், அப்பா என்னுடைய இருதயம் எப்போதும் உமக்கு திறந்து இருக்கிறது. நீர் வந்து என்னில் வாசம் செய்து என்னை மாற்றும். சாத்தானுக்கு என் இருதயம் எப்போதும் மூடியிருக்கணும். எனக்கு நீர் உதவி செய்யும் என்று இயேசுவின் நாமத்தில் பிரார்த்தனை செய்தேன். அப்போது என் மனதிலிருந்த எல்லா பாரங்களும் நீங்கி, இலகுவாக உணர்ந்த போது; எனக்கு, நான் செய்த எல்லாப் பிழைகளும் என் கண் முன்னே வந்தது. என் இருதயம் உடைந்தது.

அதன் பின்னே வேதாகமம் வாசிக்க ஆரம்பித்தேன். அப்போது என்ன நான் வேதத்தில் வாசிக்கின்றேனோ, அவ்வார்த்தை எனக்குப் புரிந்தது. ஆர்ச்சரியமாக இருந்தது. ஏனெனில் நான் என்னைப்பற்றியே அதில் வாசித்தேன். என் பாரம் எல்லாம் நீங்கிற்று. என்னுடை life இல் எதையோ miss பண்ணி அதைத் தேடிக் கொண்டு இருந்தேன். ஆனால் அந்த தேடல் தேவன் என்பதை நான் வேதம் வாசிக்கும் போது அறிந்து கொண்டேன்.

ஓர் பெரிய சந்தடி நிறைந்த நகரத்திலிருந்து ஓர் அமைதியான கிராமத்திற்குப் போனால் எப்படி இருக்குமோ அந்த உணர்வே ஏற்பட்டது. எனது 12வது வயதிலிருந்து நான் தேடியலைந்தது என்னுடனே என் அருகில் ஏன் என் கையிலே இருந்தும் நான் எனது மேட்டிமையில் என்வாழ்வை அழித்துக் கொண்டேன் என்று நினைக்கும் போது மிகுந்த வேதனையாகவும் வெட்கமாகவும் இருந்தது.

ஆனால் என் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்னுடைய எல்லாப்பாவங்களுக்கும் கல்வாரியில் பலி செலுத்திவிட்டு; "எல்லாம் முடிந்தது" என்ற வார்த்தையின் மூலமும், நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்து கொண்டேன் என்ற வார்தையின் மூலமும் எனது எல்லாக் குற்ற உணர்ச்சிகளையும் எடுத்துப் போட்டார்.

ஒரு புத்தகம் ஒருவனுடைய வாழ்க்கையை மாற்ற முடியுமா? இதனால் என்ன செய்ய முடியும் என்று நான் கிழித்து எறிந்த அந்த பரிசுத்த வேதா-கமமே இன்று எனக்கு எல்லாம் ஆனது. நான் போதையில் இருந்த போது கிடைத்து ஆனந்தம் எனக்கு வேதனையையே முடிவாகத் தந்தது. பாவத்தின் சம்பளம் மரணம் , ஆனால் தேவ ஆவியினால் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தை ஏந்திய போது, நான் எல்லாரலும் கேலி செய்யப்பட்டேன். ஆனாலும் எனக்கு சந்தோஷமே கிடைத்தது. தேவனுக்காக வாழ்வதில் ஓர் நிலையான சமாதானம் உண்டு. எனது வாழ்க்கை கேலிக்குரிய நிலையிலிருந்த போது எல்லாராலும் என் பெற்றோர் நிந்திக்கப்பட்டபோதும், அவர்கள் எவ்வாறு அந்த சூழ்நிலையை எதிர்த்து நின்றார்கள் என்பதை அறிந்தேன். நான் தேவனுக்குள் சந்தோஷமாக வாழ ஆரம்பித்த பின்பு எனக்கு பல சோதனைகள் என் சிந்தையில் வந்து என்னோடு மல்லுக்கு நின்றது. ஆனால் தேவனுடைய வார்த்தை என்னைத் தேற்றி ஆற்றி அந்த சிந்தனைக்கு எதிர்த்து நின்று வாழ கற்றுத் தருகிறது. இரண்டு கிழமை நிறுத்தி பிறகு பவிப்போம் என்று நினைத்திருந்த போதை; மறந்து போனது! கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவிற்கு என் இருதயத்தை நான் திறந்தபொழுது அவர் என்வாழ்வை மாற்றினார்.

So friends, இப்போ எனது சந்தோஷம் என்ன என்று உங்களுக்கு விளங்கியதா? என்னைப் போல பல வாலிபர் இருக்க கூடும் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் அப்படி இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நாங்கள் அப்படியில்லை இதெல்லாம் **just a joke** என்று தட்டிக்கழிக்கவேண்டாம். நீங்களும் என்னை மாதிரி போராடி உங்கள் வாழ்க்கையை அழித்துக்கொள்ளவும் வேண்டாம். அதுமாத்திரமல்ல வேறு பிரச்சனைகளுடன் கூட நீங்கள் இருக்கலாம். இயேசப்பாவை நம்புங்கள்! உங்களுக்கும் நிச்சயமாகவே விடுதலை உண்டு!

**இன்றே விடுதலையின் நாள்!**

**கர்த்தருடைய நாமம் ஒன்றே மகிமைப்படுவதாக!**

**உங்கள் சகோதரன்: அருண்**



# வெறுமையாகுதலில் தேவ பிரசன்னம்...

கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என்ற நிச்சயத்தை பெறாதவர்கள் புகழை தேடுகின்றனர். கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிப்பதற்கு மாத்திர மல்ல, அவர் நிமித்தமாய் பாடுபடுவதற்கும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

தேவன் தம்மை நேசிப்போரிடத்தில் செய்கிற உடன்படிக்கையானது ஜீவனும் சமாதானமாயி ருக்கிறது. அவர்களுடைய வழிகளெல்லாம் சத்திய வேதம் அவர்களை பின் தொடரும்.ஆவிக்குரிய அநுபவத்தில் நாம் எந்த விதத்தில் தேற்றப்பட்டோமோ அதே விதத்தில் மற்றவர்களையும் நாம் தேற்ற முடியும்.

எங்களுடைய தனிப்பட்ட தேவ திட்டத்தில் நடுமையாயிருப்பது நானும், தேவனும் ஆகும். தேவன் என்னோடும், நான் தேவனோடும் சேர்ந்திருப்பதே ஆவிக்குரிய கலவை. இந்த சித்திரத்தில் வெறுமையாக்குதலே உயிர்ப்பிக்கின்றது. நான் என்கின்ற என்னை அகற்றுகின்ற போது அந்த வெறுமை சிலுவையினால் நிரப்பப்படுகின்றது. நம்முடைய விசுவாசத்தை, ஊழியத்தை, அபிஷேகத்தை நிர்வாணமாக்கும் கேள்விகள் எழும்புகின்றபோது நான் சிலுவைக்குள் மரித்திருக்கின்றேனா?

மனிதன் நான் என்று தன்னை அடையாளப்படுத்துகின்ற போதெல்லாம் ஆவிக் குள் மரித்திருக்கின்றான். அதுவே தேவன் மனிதனோடு தொடர்பு கொள்ளமுடியாத சூனிய பிரதேசம்.நான் என்கிறதான இந்த பகுதியை மாம்சத்தில் நிரப்பிவிடாதபடி கண் திறந்த நிலையில் எங்களுடைய ஆவிக்குரிய உட்பகுதியில் பரிசுத்தம், நீதி என்கிற சுய மதிப்பீடுகள் நான் என்கின்ற எனது உட்பகுதியில் அசைக்கமுடியாத ஓடுகளாய் காணப்படுகின்றன. தேவன் அதனை வெளிச்சம் போட்டுக்காட்டி அசைக்கின்ற வரையில் அது தொடர்கின்றது.

ஆவிக்குரியதில் தேவன், மனிதனால் கட்டப் படுகின்றவற்றை இடித்துப்போடவே விரும்புகின்றார். அது எப்படிப்பட்ட பாபேலாக இருந்தாலும் சரி! தேவன் தன்னை சரி செய்கின்ற மனிதன் தன்னை ஒன்றுமில்லாதவனாக இடிக்கக் கொடுக்கின்றான்.

யுகங்களில் தேவனுக்கும் சாத்தானுக்கும் நடைபெறுகின்ற போராட்டங்கள் இன்னும் தொடர்கின்றது. அன்றும் ஒரு போராட்டம் நடந்தது. போராட்டம் நடைபெற்ற யுத்த களம் யோபுவினுடைய சரீரமாகும்! கர்த்தாவே நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். சங்:39:4

மனித இணைப்புக்கள் எப்போதுமே! உறவு பொருளாதாரம் சூழ்நிலை, தேவைகள்... என்கிற வரையறைக்குள்ளேயே சூழன்று தேய்ந்து மறைந்து விடுகின்றது.

இந்த வெறுமையாக்குதலின் சூட்சுமத்தை அறியாதபடி நிறைவு என்கிற உலகை நோக்கிய மனிதனின் பயணம் முற்றுப்பெறாத பிரயாணியின் அநுபவமே.பழக்கப்பட்ட வாழ்க்கையின் திருப்தி நிலையே! அநேக நேரங்களில் நம்மை அடுத்த நுழைவுக்குள் பிரவேசிக்காதபடி நம்மை ஆறுதலடைய செய்யமுடியும். ஏனெனில் ஆவியில் இணைப்பற்றவர்களாய் இருந்தால் இந்த வாழ்வு ஸ்தமிதம் அடைவது சாத்தியமே...

உலக நிறைவின் இளைப்பாறுதல் வயது கடந்து செல்ல செல்ல நமக்குள் ஓர் திகிலையும் இனம் புரியாத பயத்தையுமே கொடுக்கின்றது. மனித முயற்சியினால் இதனை ஈடு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் பிரயத்தனங்கள் வாழ்வை நிறைவாக்க முடியாத அங்களாய்ப்புக்குள்ளேயே நம்மை இட்டுச் செல்கிறது. ஆன்மீக பரிமானத்தில் தேவ தொடுதல் வாழ்க்கையை உணர்வுள்ளதாயும் உண்மையானதுமாய் மாற்றுகின்றது.

தேவன் நம் அலைச்சலுக்கீடாய் அமரிக்கையையும், கீழ்ப்படியாமைக்கு நேராய் மனந்திரும்புதலையும், அவநம்பிக்கைக்குப் பதிலாய் விசுவாசத்தையும் மாற்றீடாக வைக்கின்றார்.



நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள். அமரிக்கையும் நம்பிக்கையும் உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராகிய தேவன் சொல்லுகிறார். நீங்களோ அப்படி செய்ய மனதாயிராமல், அப்படியல்ல குதிரைகளின் மேல் ஏறி ஓடிப்போவோம் என்கிறீர்கள் அப்படியே ஓடிப்போவீர்கள் வேகமான வாகனங்களின் மேல் ஏறிப் போவோம் என்கிறீர்கள் அப்படியே உங்களைத் துரத்துகிறவர்கள் வேகமாய் துரத்துவார்கள். ஏசா 30:15-16.

மண் மண்ணுக்கும், தேவனால் ஊதப்பட்ட ஜீவ சுவாசம் அவரிடத்திற்கு திரும்புவதே ஆதியில் அவர் திட்டம் பண்ணின ஒழுங்கு, இந்த ஒழுங்கு நெறி தவறின போது மனிதனை மீட்க தனது குமாரனைக் கொடுக்க திட்டம் பண்ணினார். எல்லாம் முடிந்தாயிற்று எனும் சிலுவையின் முற்றுப் பெறுதல் ஜீவனை நமக்குள் தொடக்கியிருக்கிறது.

உயிரியல் விஞ்ஞானக் கொள்கையில் ஒரு பொதுவான அடிப்படையுண்டு. பரிமானத்திற்கு அடுத்ததாக இயைபாகுதல் தத்துவம். அதாவது ஓர் சூழலில் வாழத்தொடங்கின ஓர் உயிரினம் நாளடைவில் அந்த சூழலுக்கு ஏற்றவிதமாக தன்னை மறுசீரமைத்துக் கொள்கின்ற நிலையாகும். தற்காத்துக் கொள்ளுதலின் இந்த அடிப்படை சூழலுக்கு தன்னை சரிப்படுத்திக் கொள்ளுவதேயன்றி அந்த சூழலை மாற்றாது தன்னை மாற்றிக் கொண்டு இயற்கை விதியினை ஏற்றுக் கொண்ட அந்த உயிரினம் தனக்குள் சமாதானம் அடைகின்ற நிலையில் இங்கு சிருஷ்டிப்பு நிகழ்வதில்லை. ஆனால் தேவனுடைய தொடுகையோ! இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட மூன்றாவது தொடுகை. அவர் காலங்காலமாய் கட்டப்பட்ட அஸ்திபாரங்களின் மேல் கட்ட விரும்புகிறார்.அவருடைய உயிர்ப்பித்தலில் புது சிருஷ்டியே காரியமாகின்றது. இருப்பதைப் போன்று புதிதாக ஒன்றை உருவாக்குவது அல்ல சிருஷ்டிப்பு தேவனால் மாத்திரம் உண்டாவது. மாற்றீடாக கொடுக்கப்படுவது அல்லது மாற்றத்தைக் கொடுப்பது.

"உன்னிடத்தில் தோன்றினவர் பூர்வமுதல் பாழாக்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார் தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள் மேல் நீ கட்டப்படுவாய் திறப்பதை அடைக்கிறவன் என்றும் குடியிருக்கும் பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்." ஏசா 58:12

ஆவியே உயிர்ப்பிக்கின்றது. மாம்சம் ஒன்றுக்கும் உதவாது இங்கு தேவன் தொடர்பு கொள்ள விரும்புகின்ற மையப்பகுதி நமது ஆவியே! அவரது புதிதாக்குதலின் மாற்றத்தை நம் சிந்தையினாலும் அறிவினாலும் உணர்ந்துகொள்ளவோ வெளிப்படு த்தவோ முடியாது. அநேக நேரங்களில் நாம் நமது எண்ணங்களினாலும் நமது மனப்பான்மைகளினாலும் நம்மையும் மற்றவர்களையும் ஆளப்பார்க்கிறோம். நமக்கும் மற்றவர்களுக்கும் ஓர் உருவத்தை உண்டு பண்ணுகிற அடையாளத்தை கொடுப்பதே இதுவாகும்.

எண்ணங்களினாலும் மனப்பான்மைகளினாலும் கொடுக்கப்படுகின்ற சான்றிதழ் ஓர் ஆவிக்குரிய அங்கீகரிப்பாய் இருக்க முடியாது. வெளிப்பிரகாரமாய் அழகிய சிருஷ்டியையும் பாராட்டுதலையும் உண்டுபண்ணுகிற தோற்றம் உள்ளான ஆவிக்குரிய நிலையில் உயிர்ப்பை கொண்டுவர முடியாது. தேவனுடைய தராசு ஆவியையே நிறுத்துப் பார்க்கின்றது.

"மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்கு சுத்தமானவைகள் கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்." நீதி 16:2

தேவன் மாத்திரம் மையம் கொள்ள நமது ஆவியை உயிர்ப்பிக்கக் கொடுக்கின்ற போது மாத்திரமே, புதிதாக்குதலின் அசைவு நமக்குள் உணரப்படுகின்றது. அதனை அவர் தமது வார்த்தையினைக் கொண்டும் தமது ஆவியினைக் கொண்டும் அனலாக்குகின்றார். இதுவே பற்றியெரிதல்! அதுவே எழுப்புதல்.

"அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகின்ற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது எனக்கு பொறுக்கக் கூடாமற் போயிற்று." எரேமி 20:9

தேவ வார்த்தையும் தேவ ஆவியும், நான் என்னைக் களைந்துவிடவும் சுத்திகரிக்கவும் பெலப்படுத்தவும் கூடியதாயிருக்கின்றது. அந்த மனுஷனுடைய வழி தன்னால் அறியப்படாததாயும் இருக்கும். ஆகையால் நாவின் பிரதியுத்திரமானது கர்த்தரால் வருகிறதாய் மாத்திரம் இருக்கும்."நீதி 16:1

நம்மைச் சுற்றி அரணும் அடைக்கப்படுதலும் இல்லாவிட்டால் இருதயத்தில் ஆவிக்குரிய திரியானது நாளடைவில் மங்கி எரிய ஆரம்பித்து விடுகின்றது உலகம் அநேக நேரங்களில் நம்மை நெருக்குவதால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னதென்று அநேக நேரங்களில் நமக்கு விளங்குவதில்லை. உலகம் அநேக நேரங்களில் சுய நீதியை நமக்குள் உண்டாக்கவே எத்தனிப்பதாய் இருக்கும். இழப்பு ,துயரம், சுய இரக்கம், வெறுப்பு என்பவையே நம்மை, நமது நீதியை முன் நிறுத்தும் காரணிகளாய் அமைந்து விடலாம். அநேகர் இதற்குள் சிக்குண்டு வெளிவராமல் தவிக்கின்றனர். இதுவே நமது விசுவாசத்தைக் கறைப்படுத்தும் காரணிகளாய் மாறி நமக்கு முன்பாக முளைத்து எழும்பி நிற்கின்றது.

"கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து...." பிலி3:9

தேவனிடத்தில் இருந்து வருகின்ற இந்த நீதி மாத்திரமே நான் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றேன் என்பதை எனக்குள் அடையாளப்படுத்த முடியும். ஆகவே ஆவியிலும் மாம்சம் எனும் கலவையில் நாம் காணப்படுகிற படியினால் நான் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னதென்று அறியேன் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன் என்று பவுல் சொல்லுகிறார்.அவர் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளை நமக்குளே இருக்கிற பரிசுத்த ஆவியினாலே காத்துக் கொள்ளமாறு எழுதுகிறார்". 2தீமோ1:14

கிறிஸ்துவின் வருகைக்கென காத்திருக்கும் நாம், நம்முடைய இரட்சிப்பு நிறைவேறும் நாளுக்கென்று சமீபமாயிருக்கிறோம். இது அநுதின ஆவிக்குரிய அநுபவமாய் மாறுகின்றபோது நாம் தேவனோடு உள்ள உறவில் இன்னுமாய் பெலப்படுகிறோம் என்பதாகவே அர்த்தம் கொள்ளலாம். தேவனோடு உள்ள உறவில் ஓர் தனி மனிதன் அனல் கொள்ளுதல் என்பது அந்த மனிதன் சார்ந்திருக்கிற சபையை உயிரடையச் செய்யும். ......... ........ ....

தேவன் தேடுவது ஒரு மனிதனையே!

உலகில் உபத்திரம் உண்டென்பதை அறிவோம். நமக்கு முன்பாக காலங்கள் வைக்கப்ப பட்டிருக்கிறதை அறிவோம். அதனை தேவன் தனக்குள்ளாக நமக்கென்று நிர்ணயம் பண்ணியிருக்கின்றார் என்பதே நமக்குரிய வெற்றியாகும். உலகம் நிலையற்றது உண்மைதான் ஆனாலும் நாம் கிறிஸ்துவுக்கள் இருக்கின்றோம் என்ற நிச்சயமே நிலையானது! ஜீவனானது!

இந்த வாழ்வே முடிவில்லா வாழ்வின் தொடக்கம் என பிரசங்கி சொல்லுகிறான். எல்லா நதிகளும் சமுத்திரத்தில் ஓடி விழுந்தாலும் சமுத்திரம் நிரம்பாது. தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் திரும்பும். பிர1:7 தேவன் வானத்தின் கீழ் நடைபெறுகின்ற எல்லாவற்றினுடைய முடிவினையும் அறிந்து இருக்கிறார். எனவே தான் நாம் உலகத்தில் பெலவீனர்கள் என எண்ணப்பட்டாலும் பெலமுள்ளவர்களாகவும் அற்பமானவர்களெனப்பட்டாலும் தேவனுக்கு அருமை யானவர்களாகவும் காணப்படுகிறோம்.


உலகத்தில் இருக்கிறவர்களாய் காணப்பட்டாலும் உலகில் இல்லாதவர்களாய் இருக்கிறோம். எமக்கென்று வழியுண்டு, நமக்கென்று ஓர் வீடு உண்டு. ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார்; நான் காற்றிலே சிலம்பம் பண்ணுகிறவனாயிராமலும் என்னுடைய ஓட்டத்தை நான் வீணே ஓடுகிறதுமில்லை என்று சொல்லுகிறார். நிர்ணயிக்கப்பட்ட அந்த இலக்கு அழைப்பின் பந்தயப் பொருளேயாகும். சிலுவையின் மூலமாய் எங்களுக்கென்று ஓர் உயில் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த உயிலின் பெயர் என்ன தெரியுமா? அதுவே நித்திய ஜீவன். அந்த ஜீவனுக்குரிய மரணம் சிலுவையிலே சம்பவித்தாகிவிட்டது.

"எங்கே மரண சாசனம் உண்டோ! அங்கே அந்த சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்". எப்படியெனில் மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும். ஏபி 9:16-17

தேவன் தமக்கென்று இருந்த ஒரே அன்பின் குமாரனை சிலுவையிலே எங்களுக்காய் பலியிட்டு எங்கள் யாவர் மேலும் தமது அன்பை விளங்கப்பண்ணினார். அந்த மரணசாசனத்தை பெறுமதியுள்ளதாய் மாற்றினார்.

**சகோதரன்: மாறன் (ஜேர்மனி)**

## படம் பார் பாடம் படி!




*படம் பார் பாடம் படி!*

*கல்வாரியில் இயேசுவின் பாடுகள் பார்*
*பாடுகள் உணர்த்தும் பாடங்கள் படி*

*இயேசுவின் தலையில் முள் முடி பார்*
*உன் அக்கிரமத்தின் சிந்தை பல படி*

*அவர் கால்களில் காயத்தின் உதிரம் பார்*
*பாவம் செய்ய உன் கால்கள் சென்ற தீவிரம் படி*

*அவர் ஆத்துமத்தின் வருத்தம் பார்*
*உன் ஆத்துமாவின் மீட்பு படி*

**"இதற்காகவே அழைக்கப்பட்டுமிருக்கின்றீர்கள்" ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு,நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்"**
**1 பேதுரு 2:21**

**சகோதரன்:புதியவன்**

# சகோதரிகளே!
# நாம் எப்படி வாழ்கிறோம்? இப்படியும் வாழலாம்!

**ஏவாள்:** உன்னத தேவனின் படைப்பின் சிகரமாகிய ஆதாமின் விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்ட பெண் இவள்! தேவனால் சகல சுதந்திரங்களும் ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டு ஒரே ஒரு நியதியை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியாது விலக்கப்பட்ட கனியை; தான் புசித்தது மாத்திரம் அன்றி தன் கணவனுக்கும் கொடுத்ததன் மூலம் கீழ்ப்படியாமை எனும் பாவத்தால் சாபத்தை பெற்ற பெண்!

**யோபுவின் மனைவி:** கர்த்தரிடத்திலிருந்து சகல ஆசீர்வாதங்களும் கொடுக்கப்படடு, கர்த்தரின் உடன்பாட்டுடன் ஆசீர்வாதம் பிசாசினால் எடுபடும் நிலையில்; இது எதனால் ஏற்ப்பட்டதென சிந்திக்காது, தான் தேவனை மறுதலித்தது மட்டும் அன்றி தன் கணவன் யோபுவையும் தேவனை தூஷிக்கச் சொன்ன பெண்!

**லோத்தின் மனைவி:** தேவனின் வழிகாட்டலின் படி அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள செல்லும் வழியில் பின்னிட்டுத் திரும்பிப்பார்த்து உப்புத்தூண் ஆன பெண்!

**எஸ்தர்:** தாழ்மையிலிருந்து அவள் எண்ணிப்பார்க்க முடியாத உயர்வான நிலைக்கு தேவ கிருபையால் உயர்த்தப்பட்ட வேளையில், அவள் அந்நிலையை அடைந்தமைக்குரிய பிரதிபலிப்பாக தன் இன மக்களுக்காக தன் உயிரைக்கூட பொருட்டாக எண்ணாமல் ராஜாவிடம் பரிந்து பேசி தன் மக்களுக்கு விடியலை பெற்றுக்கொடுக்கிறாள்!

**மரியாள் (இயேசுவின் தாய்):** சாதாரண பெண்ணுக்கு திருமணம் பற்றிய சகல எதிர்பார்ப்புக்களும் கொண்டிருந்த வேளையில் தேவனிடமிருந்து கிடைத்த ஓர் வாக்குக்கிணங்கி பல அவமானங்களின் மத்தியிலும் தேவனுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்த ஆவியினால் தன் வயிற்றில் குழந்தையை சுமந்தவள்!

**மரியாள் (மார்த்தாளின் சகோதரி):** இயேசு அவர்களின் வீட்டுக்கு வந்திருந்த வேளையில் மார்த்தாள் இயேசுவுக்காக பணிவிடைகள் செய்யும் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதும் மரியாள் எதையும் பொருட்படுத்தாது இயேசுவின் பாதத்தண்டையில் இருந்து அவரது போதனைகளை கவனித்த பெண்! "மார்த்தாளே, மார்த்தளே நீ அநேக காரியங்களைக் குறித்தக் கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்." லூக்10:41-42 என இயேசு மரியாளுக்காக சாட்சி பகருகின்றார்.

மேற்கூறப்பட்ட பெண்கள் வேதாகமத்தில் சொல்லப்படும் பாத்திரங்களாக காணப்படுகின்றனர். நான் இதில் கூற முற்படுவது என்னவெனில்; நாம் நம் சாதாரண உலக வாழ்க்கையில் ஏவாளைப்போல சகல ஆசீர்வாதங்களையும் தேவனிடமிருந்து பெற்றும் தேவனுக்காக குறைந்த பட்சம் நமக்காக நன்மையாகத் தோன்றும் ஓர் விடயத்தையேனும் தியாகம் செய்ய இயலாத நிலையிலிருந்து, மிகப்பெரிய மேன்மையை இழந்து சாபத்தை அடையும் நிலைக்கு தள்ளப்படுகிறோமா?

அல்லது தேவனிடமிருந்து சகல ஆசீர்வாதங்களையும் பெற்று அநுபவித்துவிட்டு அதை இழந்துபோகும் தருவாயில்; தேவன் நமக்கு உதவி செய்வார் என நாமும் விசுவசியாது,நம்மைச் சார்ந்தவர்களையும் அவிசுவாசத்திற்குள்ளாக்க காரணர் ஆகிறோமா?

அல்லது பாவம் நிறைந்த உலக வாழ்விலிருந்து தேவனால் மீட்கப்பட்டு அவரது வழியில் செல்லும் போது மீண்டும் பகட்டாகத் தெரியும் உலக காரியங்களுக்காக ஆசைப்பட்டு பின்னிட்டு அதனை தேடி ஓடி நாம் யார் என்ற சுயத்தை இழக்கிறோமா?
மேற்கண்ட பெண்கள் தமக்கு கிடைத்த ஆசீர்வாதத்தினை ஏதோ ஓர் வகையில் இழந்து போயினர்.
நம் நிலையும் இவர்களைப் போல் உள்ளதா? சிந்திப்போம்! நம்மை நாமே மாற்றிக் கொள்ள முற்படுவோம்! அதுமட்டுமன்றி நம் ஆசாபசங்களை கர்த்தருக்கென்று தியாகம் செய்து அவர்க்காக அவமானங்களை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு கீழ்படிந்து மேன்மையைப்பெற்ற மரியாளைப்போலவும், நம்மைச் சார்ந்தவர்களுக்காக நம்மால் இயன்றளவு நம்மிடம் இருப்பவற்றை கொடுத்தாவது அவர்களுக்கு உதவி, எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தேவ பெலத்துடன் எம் ஜனத்துக்கு உதவ எஸ்தரைப்போல எம்மை அர்ப்பணிப்போம்! தேவனுக்கடுத்த காரியங்களை முன்னிலைப்படுத்தி அவற்றை சாக்காக கொண்டு தேவனுக்குரிய காரியங்களை விட்டுவிடாது மரியாளைப்போல தேவனுக்குரிய காரியங்களைத் தேட முற்படுவோம்!

**சகோ. கௌஷி ஈகன் ஸ்ரோரர்**

# ஆயத்தப்படு ஆயத்தப்படுத்து...




எமது தமிழ் திருமுழுக்கு சபையின் வளர்ச்சியையும் விஷேசமாக வாலிபர் ஐக்கியத்தையும் பற்றி இந்த கட்டுரையில் காண்போம்.

எங்கள் தமிழ் திருமுழுக்கு சபையானது வெறும் கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்டது அல்ல மாறாக தேவனுடைய ஆவியினாலே கூட்டி கட்டப்பட்டு வருகிறது. இச்சபைக்கு வரும் ஒவ்வொரு ஆத்துமாக்களுக்கும் இளைப்பாறுதலை கட்டளையிட்டுவருகிறார். அப்படியே ஒவ்வொரு ஆத்துமாக்களுக்கும் எங்கள் மேய்ப்பன் மூலம், கர்த்தர் பேசுகின்ற வார்த்தைகள் விசுவாசத்தை கொண்டு வருகின்றது. மேலும் எங்கள் சபையில் மூப்பர்களும் ஒவ்வொருவருடனும் அன்போடு கூடிய விசாரிப்புடனும் ஜெபித்து வருகிறார்கள்.மேலும் சபை விசுவாசிகளும் அன்பும் அரவணைப்புடனும் ஐக்கியத்துடன் பழகி வருகின்றனர்.

இப்படியிருக்க கர்த்தர் எங்கள் சபையின் வாலிபர்களை கொண்டு செய்து வருகிற ஊழியங்களுக்காக கர்த்தரை நன்றியுடன் ஸ்தோத்தரிக்கிறேன். எங்கள் வாலிபர் ஐக்கியமானது இந்த ஒஸ்லோ நகரத்தில் ஒரு பெரும் எழுப்புதலை கொண்டு வரும் என்பதில சிறிதும் ஐயம் இல்லை. எங்கள் வாலிபர் ஆராதனையானது மாதத்தில் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறுகிறது. அன்றய தினம் எல்லோரும் வந்து கலந்து கொண்டு கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்று செல்லுகின்றனர். மேலும் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் வாலிபர்களுக்கான உபவாசமும் நடைபெறுகிறது.

குறிப்பாக இந்த சபையில் இசைக்கருவிகளை மெட்டிட்டு அதற்கு சரியான பாட்டுகளை எடுத்து அவர்களுடைய தாலந்துகளை வெளியே கொண்டு வர அவர்களை உற்சாகப்படுத்துவதில் எங்கள் மேய்ப்பனின் துணைவியாரும் எங்கள் பாசத்திற்குரிய அத்தை அனுரேகா சின்னத்தம்பி அவர்களுக்காக கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறோம்.

மேலும் வருடத்தில் இரு முறை வாலிபர் முகாம் சென்று வருகிறோம். அந்த முகாமிலும் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பற்றியும், வேத பாடத்தில் எங்களுக்கு எழும் சந்தேகங்களை விளக்குவதிலும், ஜெபத்தில் நடத்துவதிலும், விளையாட்டுகளிலும், எங்களை வார்த்தையிலும் நடத்துவதில் எங்கள் மேய்ப்பனும், மூப்பர்களும் உதவி செய்கின்றனர். இந்த வாலிபர் ஐக்கியமானது ஒரு நாள் உலகத்தை கலக்கும் என்று விசுவாசிக்கிறோம். வாருங்கள் வந்து பாருங்கள் எங்களோடு வந்து இணைந்து கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாக்கி வெளியிலும் சத்தியத்தைச் சொல்லுங்கள். உலகத்தை ஆயத்தப்படுத்துங்கள் என்று அன்போடு அழைக்கிறோம். "ஆயத்தப்படு ஆயத்தப்படுத்து" தேவனுக்கே மகிமை!

**ஆரோன் சகாயராஜ்**

# கர்த்தருடைய நாமமே மகிமைப்படுவதாக!



கர்த்தருடைய நாமமே மகிமைப்படுவதாக!
எனது பெயர் விஜி, எனக்கு இப்போது 22 வயது. எனது இந்த இளம் வயதில் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவிற்குள் என் வாழ்வைத் தொடர்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இது எனக்கு கிடைத்த தேவனுடைய சுத்தக் கிருபையே ஆகும்.


நான் சுமார் 8 வருடங்களுக்கு முன் நோர்வே தேசத்திற்கு வந்தேன். இங்கே வந்த போது எல்லாம் புதுமையாக இருந்தது. எனது சகோதரியின் வீட்டில் இருந்தேன். ஆனால் எந்த கட்டுப்பாடிற்கும் கீழ்ப்படியவில்லை. நாட்டின் சட்டங்களும் எனக்கு உதவின. புதிய நண்பர்களின் பழக்கம் உண்டாயிற்று. எனது வாழ்க்கை மாற ஆரம்பித்தது. எல்லா வாலிபர்களும் நினைப்பது போலவே நானும் வாழ்வை அநுபவிக்க நினைத்தேன்.. நண்பர்களின் சகவாசம் சிரிப்பும் கேளிக்கையுமாக உற்சாகத்தைத் தரவே, படிப்பில் அக்கறை இல்லாமல் போனது. எல்லா தீய பழக்கங்களும் பழகிக் கொண்டேன். நான் அழிவின் பாதையில் செல்வதை நினையாமல் நான் வாழ்க்கையை அநுபவிக்கின்றேன் என நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் இருதயத்தில் சமாதானம் இருக்கவில்லை, சந்தோஷமாக இருப்பது போல் காட்டி விதண்டாவாதம் கதைத்துக்கொண்டிருந்தேன்.

இவைகளுக்கு இடையில் என் சகோதரி, என்னை எப்படியாவது ஞாயிறு ஆராதனைக்கு இழுத்துச் சென்று விடுவார். எனக்கு ஆரம்பத்தில் மிகவும் வெட்கமாக இருந்தது. எனது நண்பர்களும், நான் அல்லேலூயா கூட்டத்திற்கு போவதானால் கேலி செய்தார்கள். சகோதரியிடம் சண்டை செய்து சபைப் பக்கம் போவதை நிறுத்திவிட்டேன். ஆனால் என் சகோதரி எனக்காக ஜெபித்துக் கொண்டேயிருந்தார். நான் தேவனுடைய சமூகத்தை வெறுத்தேன். ஆனால் தேவன் என்னை விடவில்லை. என்னை நீளக் கயிற்றில் விட்டார். முன்பு இருந்ததைவிட உல்லாசமாக இருக்க ஆரம்பித்தேன் பெரிய ஆபத்துக்களை சந்திக்க நேரிட்டது. பிரச்சனைகளும் அதிகமாயின. என் சகோதரி என்னை வீட்டை விட்டு வெளியேற்றினார். எனது தமிழ் நண்பர்கள் கைவிட்ட போது என்னை ஓர் தாய்தாலாந்து தேத்து நண்பன் தனது வீட்டில் சேர்த்துக்கொண்டான். எல்லோரும் என்னைக் கைவிட்டபோதும் தேவ கரம் என்னை தொடர்ந்து தாங்குவதை நான் உணரவில்லை.

தனிமையில் என்னை தேற்றுவார் இன்றி அழுது கொண்டிருந்தேன். அந்நேரத்தில் எனக்கு முன்பே அறிமுகமான அங்கில் புதியவன் என்னைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அவர் தன்னுடன், நான் வெறுத்த தேவ சமூகத்திற்கு வரும்படி அழைத்தார். அப்போது தான் எனக்கு புத்தி தெளிந்தது. தேவ அன்பு விளங்கியது. நான் வெறுத்த தேவ சமூகமே எனது இந்த இருளான வாழ்க்கைக்கு வெளிச்சம் என்பதை உணர்ந்தேன். அங்கிளுடன் ஆலயத்திற்கு வந்தேன்.சபைக்கு வந்த போது, எனக்கு நல்ல பெற்றோரை தேவன் தந்தார். நான் இழந்தவைகளை திரும்பவும் பெறத் தொடங்கினேன். இவ்வளவு நாளும் நான் நினைத்து இருந்த வாழ்க்கை பொய், அது மாயை என்பதை எனக்கு தேவ சமூகம் விளக்கினது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து என் பாவங்களுக்கெல்லாம் சிலுவையில் பலி செலுத்தி விட்டார் என்பதையும், அவரை நான் விசுவாசிக்கிற போது நான் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாகிறேன் என்று என் ஆவிக்குரிய தகப்பன் அன்ரன் சின்னத்தம்பி அவர்கள் எனக்கு விளக்கின போது தேவ கட்டளைக்கு கீழ்படிந்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றேன். அதன்பின் என் வாழ்க்கை மாற ஆரம்பித்தது. எனக்கு பார்வைக் குறைபாடு இருந்தது. கண்ணாடிபோட வெட்கமாக இருந்தது. கண்ணாடி அணிவதைத் தவிர்த்தேன். எனது பார்வை மோசமடைந்திருந்தது. எனது ஆசை லென்ஸ் போட வேண்டும் என்பதே. ஆனால் இதற்கு யாரும் உதவி செய்யாது இருந்தார்கள். தேவன், எனக்குத் தந்த ஆவிக்குரிய பெற்றோர் மூலமாக அந்த வழியினை பெற்றுத் தந்தார். அதுமாத்திரமல்ல எனது கட்டுப்பாடற்ற வாழ்க்கை மாறிவிட்டது. இந்த கட்டுப்பாட்டிற்குள் வர மிகவும் கஸ்டப்பட்டேன். எல்லாத்தையும் விட்டு ஓட வேண்டும் போல இருந்தது. ஆனால் ஓட முடியவில்லை. என்னை நல் வழிப்படுத்துவதில் தேவனும் என் பெற்றோரும் உறுதியாக இருந்தனர். ஒரு வருடமானது. "தேவனுடைய சிருஷ்டிகளான நாமே பிடிவாதமாக காரியம் செய்கிற போது, எங்களை சிருஷ்டித்த தேவன் எவ்வளவு பிடிவாதமாக இருப்பார்." என்பதை உணர்ந்தேன். 2008 ஆம் ஆண்டில்

வேதகமக்கல்லூரிக்கு செல்லும் தருணம் கிடைத்தது. எனக்கு மொழி பிரச்சனை இருந்த போதிலும் என் ஆவிக்குரிய பெற்றோர் என்னை உற்சாகப்படுத்தி அனுப்பிவைத்தனர். தேவனது சமூகத்திற்குச் சென்றால் நண்பர்களையும் மதிப்பையையும் இழந்து விடுவேன் என நினைத்த நாட்களுக்காக வெட்கப்படுகிறேன். எனக்கு நல்ல நண்பர்களுண்டு. நல்ல மதிப்பு உண்டு. என்னை வெறுத்தவர்கள், அவமதித்தவர்கள் இன்று என்னை ஆர்ச்சரியமாக பார்க்கும் அளவிற்கு என் தேவன் என் வாழ்வை மாற்றி இருக்கிறார். கர்த்தருக்கே மகிமை!

**உங்கள் : விஜி**



# அழகான பூ...

வாடாத பூ
வாசனை வீசும் பூ
வாழ்க்கைக்கு தேவையான பூ
தேவன் அருளும் இரட்சிப் பூ

மல்லி பூ வாடும்
அல்லி பூ வாடும்
வாழ்க்கையில் மலரும் பூ
இயேசு கொடுக்கும் அன்பூ
எவ்வளவு ஆச்சரியம் தேவனின் படைப்பூ

ஆண்டவரின் வார்த்தையில் இருப்பது சிறப்பூ
இயேசுவை அறியாமல் இருப்பது தப்பூ
அவரை அறிந்து கொள் அப்பூ

வாழ்க்கையில் வருவது கசப்பூ
அதை தவிர்க்க இயேசுவை நம்பூ
இதை ருசித்தால் கிடைப்பது இனிப்பூ
இதை பெற்று வாழ வந்திடு
இரட்சிப்பூக்குள்

**சகோதரன்: சிங்காரவேல்**

# வாழ்த்துவேன் என் இயேசுவையே....

வாழ்த்து என்றால் வாழ்த்திடுவேன்
என் இயேசுவைத்தானே
போற்று என்றால் போற்றிடுவேன்
என் தெய்வத்தைத்தானே

அன்பு நிறைந்தவர் இயேசு
ஆறுதல் அளிப்பவர் இயேசு
பாவி என் பாவத்தை
தம் இரத்தத்தால் கழுவிய இயேசு

இயேசு என்று சொல்லும் போது
என் உள்ளம் மகிழுமே
அவர் அன்பு கரம் என்னை
ஆற்றி தேற்றுமே

இயேசு அன்பால் கூடி நாங்கள்
ஒன்றாய் சேர்ந்து பாடி
நிறைவான ஆசீர்வாதம் தேடி
நீங்களும் வந்து வாழ்த்தி
பெற்று வாழ்வீர் இயேசுவின் ஆசி

**சகோதரி S. புஷ்பா**

# பழையன கழிந்து எல்லாமே புதிதாயின...

பழையன கழிந்து எல்லாமே புதிதாயின என்ற ஆண்டவரின் வார்த்தையின் படி நான் ஆண்டவரை ஏற்றுக் கொண்ட நாள் முதல் எல்லாமே புதிதாயின. என்னுடைய வாழ்வு புதிதாயிற்று. புதிய ஆவியைத் தந்தார்.தன்னுடைய புதிய கிருபையில் வழி நடத்துகிறார். நித்திய ஜீவன் செல்வதற்கான வழியைக்காட்டியுள்ளார். இருளில் வாழ்ந்த இருதயத்தை புதிய ஒளியைக் காணச்செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக சபை என்கிற புதிய குடும்பத்தைத் தந்தார். கர்த்தரை நினைத்து ஜெபிக்கும் இருதயம் ஒருநாளும் அழிவைக் காண்பதில்லை என்பதின் படி எனக்காக எந்த சசோகதரனோ சகோதரியோ ஜெபித்த ஜெபம் என்னை இவ்வளவாய் மாற்றியது.

**சகோதரன்:கோபி**

> **"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின."**





## ஓடு ஓடு நில்லாமல் ஓடு....

ஓடு ஓடு நில்லாமல் ஓடு........
தெய்வத்தை தேடுவாயாகில் இயேசுவைத் தேடு
இயேசுவை நம்பி நித்திய வாழ்வு பெற ஓடு

வெற்றியைக் காண விரைவாக ஓடு
உன் வியாதி தீர இயேசுவை நோக்கி ஓடு
விசுவாசத்தைக் காத்துக் கொள்ள தொடர்ந்து ஓடு
நீதியின் கிரீடம் பெறும் படியாய் ஓடு

உன் பாவம் நீங்க ஓடு
பரலோகில் இடம் பெறும்படியாய் ஓடு
பரம பிதாவை நோக்கி ஓடு
பாதாளத்திற்கு விலக்கி மீட்டவரை நோக்கி ஓடு

ஆண்டவரின் வர்த்தையை நம்பி ஓடு
அவரை இறுக பற்றி ஓடு
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரை நோக்கி ஓடு
நேசரிடம் பலரை ஆயத்தப்படுத்தும்படியாய் ஓடு

**சகோதரி: கௌசலா**

# அன்பான தகப்பன்

ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தன் தகப்பனின் ஆஸ்தியில் தனக்கு வரும் பங்கை கேட்டு வாங்கினான். சில நாட்களுக்குப்பின் தூரதேசத்திற்கு புறப்பட்டு போனான். அங்கே அவன் துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை எல்லாம் அழித்துப்போட்டான். பின்பு அந்த தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டாக, அவன் பசியால் கஷ்டப்பட்டான். அந்த வேளை அந்த தேசத்து மனிதன் தன் வயலில் பன்றிகளை மேய்க்கும்படி அவனை அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்னும் தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப மனதாயிருந்தான். அந்த வேளை அவனுக்கு புத்தி தெளிந்தது. தன் தகப்பன் வீட்டில் வேலை செய்யும் வேலையாட்களுக்குக் கூட நல்ல உணவு கிடைப்பதை நினைத்தான். உடனே தன் தகப்பன் வீட்டிற்கு புறப்பட்டு போய்,தகப்பனே பரத்திற்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனி மேல் உம்முடைய குமாரன் என்று சொல்ல பாத்திரன் அல்ல என்று சொல்லி மன்னிப்புக் கேட்பதற்காகபுறப்பட்டுப் போனான். தகப்பன் அவன் வருவதைக் கண்டு ஓடிப்போய் அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார். அதே போல நாமும் நம்முடைய பிதாவாகிய தேவனைவிட்டுப் பிரிந்து வாழ்கிறபோது, தேவன,; நாம் மனந்திரும்பி அவரிடம் வரும் வரையில் நமக்காக ஆவலோடு காத்திருக்கிறார்.

**பிரியன்**



## கர்த்தர் நம்மோடு இருக்கின்றார்

ஒரு நாள் ஒரு மனிதன் ஓர் நதியைக் கடக்க முயற்சித்தான். ஆவனால் முடியவில்லை. அந்த நதியைப் போலவே அவன் வாழ்க்கையிலும் நிறைய பிரச்சனைகளும் தொல்லைகளும் இருந்தன. ஒருநாள் வந்தது! ஆவன் அந்த நதியை கண்டிப்பாக கடந்து விட வேண்டும் என்று முடிவெடுத்தான். ஆப்போது கர்த்தரிடத்தில் பிரார்த்தனை செய்தான். கர்த்தர் அவனுடனே இருப்பதாக வாக்களித்தார். அப்போது அவன் விசுவாசத்தில் நதியில் இறங்கினான். (நதயில் இறங்கியபோது) அவனை அந்த நதி தத்தளிக்க விட்டது. ஆனால் அவன் மூழ்கிப் போகவில்லை. நதியைத் தாண்டி கரை சேர்ந்தான். பின்பு அவன் கர்த்தரை நோக்கி "ஏன் என்னுடன் வரவில்லை" எனக் கேட்டான். "நான் உன்னுடனே வந்ததினால் தான் நீ நதியைக் கடந்தாய்" என்று கர்த்தர் பதில் சொன்னார். அதற்கு அவன், அது எப்படி? நீர் என்னுடன் வந்திருந்தால் நதியில் என்னைத் தத்தளிக்க விட்டிருக்க மாட்டீர் என்றான். கர்த்தரோ" நான் உன்னுடனே வந்ததினால் தான் நீ நதியுடன் அடிபட்டு போகவில்லை" என்றார்.

சகோதரர்களே உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் உங்களோடுதான் வருகின்றார். ஆவர் உங்களோடு வரவில்லையென நினைக்காதீர்கள். கர்த்தர் உங்களோடு வருவதினால் தான் நீங்கள் உங்கள் பிரச்சனைகளில் (சோர்வுகளில் அல்லது கவலைகளில்)மடிந்து போகாமல் இருக்கின்றீர்கள்.

கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை உபா:31-8

**ஆரோன் சகாயராஜ்**

# தமிழ் திருமுழுக்கு சபையின் நிகழ்வுகள்

தமிழ் ஆராதனை - ஞாயிறு 15.00

வேதப்படிப்பு - வெள்ளி 18.00

உபவாச ஜெபம் - மாதத்தின் முதல் சனி 10.00

இளைஞர் ஐக்கியம் - சனி 10.00

தமிழப்பாடசாலை - சனி 11.00

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரரே...
உங்கள் தேவைகளுக்காக ஜெபிக்கவும், உங்கள் பிரச்சனைகளுக்கும்,
கேள்விகளுக்கும் வேதத்தின் அடிப்படையில் விடையளிக்கவும்,
நாங்கள் வாஞ்சையாயிருக்கிறோம்




Tamil Baptist Menighet
Vålerengata 2
0657 Oslo
Tel- 64925691/ Mob - 95881223
http://tamilbaptist.net

Pastor: Anton Sinnathamby
Tlf. 64925691/95881223
e-mail: anto-b@online.no
www.tamilbaptist.com
www.tamilbaptist.net